## தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2022

ஆண்டு: 3 திகதி: 18.06.2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி. நிர்மலா தயாளன்
திருமதி. ஷர்மிளா திருச்செந்தில்ராஜன்

மாணவர் பெயர்: ______________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 15 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 15 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 15 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

**சாதுரியமான சிறுமி**

பீர்பாலின் மகள் ஐந்து வயதுப் பெண், மிகவும் சாதுரியமாகப் பேசுவாள். ஒருநாள் தானும் அரண்மனைக்கு வருவேன் எனத் தந்தையிடம் அடம் பிடித்தாள். பீர்பாலும் மறுக்க முடியாமல் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அரசனைப் பார்ப்பது அதுவே முதல்முறை. ஆனாலும் சிறுமி மிகவும் மரியாதையோடு, அரசரை வணங்கிவிட்டு நின்று கொண்டிருந்தாள். அக்பர் பிரியத்தோடு சிறுமியை அருகில் அழைத்து, “குழந்தாய் உனக்கு ஏதேனும் சொல்லத் தெரியுமா” என விசாரித்தார்.

“ஓ! எனக்கு நிறையவும், குறையவும் பேசத் தெரியுமே” என்று கூறினாள் சிறுமி. “குறைவும், நிறைவும் என்றால் என்ன அர்த்தம்?” எனக் கேட்டார் அக்பர். “பெரியோர் முன் குறைவாகப் பேசவேண்டும்: சிறுவர் முன் நிறையப் பேச வேண்டும்” என விளக்கம் கூறினாள் சிறுமி.

“புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? தந்தையைப் போல் மகளும்” என்று இருவரையும் புகழ்ந்து பாராட்டியதோடு சிறுமிக்குப் பரிசுகளும் அளித்தார் அக்பர்.

1. பீர்பாலின் மகளுக்கு எத்தனை வயது? ______________________________
2. பீர்பாலின் மகளுடைய சுபாவம் என்ன? ______________________________
3. பீர்பாலும், மகளும் எங்கே சென்றனர்? ______________________________
4. இக்கதையில் வந்த அரசரின் பெயர் என்ன? ______________________________
5. இதில் வரும் பழமொழி எது? ______________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 15 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

இரண்டு சொற்களைக் கண்டு பிடியுங்கள்

1. பாவாடை ----------------- ---------------
2. கதைகள் ----------------- ---------------
3. தலைவலி ----------------- ---------------
4. நடவடிக்கை ----------------- ---------------
5. காணவில்லை ----------------- ---------------

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

பின் வரும் சொற்களைக்கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக

(அப்பா, சித்தப்பா, அக்கா, மாமா, அம்மம்மா)

1. அம்மாவின் தம்பி ---------------------------
2. உமது தந்தை ---------------------------
3. அம்மாவின் அம்மா ---------------------------
4. உமது மூத்தசகோதரி ---------------------------
5. அப்பாவின் தம்பி ---------------------------

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

பன்மைச் சொற்களை எழுதுக.

கண் - ---------------------------

கால் - ---------------------------

விரல் - ---------------------------

பழம் - ---------------------------

குடம் - ---------------------------

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

ஏதிர்ச் சொற்களை இணையுங்கள்

| | |
|---|---|
| அகலம் | சிறியது |
| துன்பம் | பகைவன் |
| பெரியது | இலாபம் |
| நண்பன் | இன்பம் |
| நட்டம் | நீளம் |

| வினா இல | 6 | புள்ளிகள் | 15 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

உங்கள் பிறந்த நாளைப் பற்றி உங்கள் நண்பனுக்கு / நண்பிக்கு கடிதம் எழுதுங்கள்

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

பின் வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து 5 வசனங்கள் எழுதுக.

1. நானும் எனது குடும்பமும்
2. கொண்டாட்டம்
3. நான் பங்கு பற்றிய கலைவிழா